செ.வெ.எண்.69 நாள்.20.07.2017.

# திருநெல்வேலியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் (டாம்கோ) கடனுதவி வழங்கும் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை மேலாண்மை இயக்குநர் முனைவர் மா.வள்ளலார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் (டாம்கோ) கடனுதவி வழங்கும் திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை மேலாண்மை இயக்குநர் முனைவர் மா.வள்ளலார்,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை மேலாண்மை இயக்குநர் அவர்கள் பேசியதாவது–

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) மூலம் கல்வி கடன்,தொழிற் கடன், குழு கடன், மற்றும் தனிநபர் கடன் உள்பட பல்வேறு கடனுதவிகள் குறைவான வட்டி விகிதத்தில் அதிக பட்சமாக ரூ.35 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. ரூ.1 இலட்சம் வரை பிணையமின்றி கடனுதவிகள் வழங்கப்படுகிறது. இதுகுறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். கடன் உதவி பெறுவதில் சிக்கல்கள் ஏதும் உள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்யப்படுகிறது. தொழில்களுக்கான கடனுதவிக்கு 6 சதவீத வட்டியிலும், கல்வி கடனிற்கு 3 சதவீத வட்டியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்களை அறிய tn.gov.in என்ற இணையதளத்தில் சிறுபான்மையினர் நலத்துறையின் மக்கள் சாசனத்தினை பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம். திருநெல்வேலி மாவட்டம் சிறுபான்மையினர் அதிகம் உள்ள மாவட்டம். இங்கு நிறைய தொழில்களை தொடங்க சிறுபான்மையினர் முன்வர வேண்டும். மேலும், அவர்களுக்கு இதுதொடர்பான பயிற்சிகளையும் வழங்க வேண்டும்.

டாம்கோ நலத்திட்டங்கள் மூலம் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே முகாம் நடத்தப்பட்டு, ரூ.2.20 கோடி பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அதிகமான முகாம்களை நடத்தி, ரூ.20 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு குறைந்தது 2 ஆயிரம் விண்ணப்பங்களை பெற வேண்டும். மேலும், 2017–2018ம் நிதியாண்டிற்கு சிறுபான்மையினர் கல்வி உதவித் தொகை வழங்கும் வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் 25 சதவீதம் வசிக்கும் கிராம பகுதிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் பல்நோக்கு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவர்கள் முன்னிலை வகித்து பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் மெகா கடன் வழங்கும் முகாம் நடத்தப்பட்டு, ரூ.2.50 கோடி மதிப்பிலான கடனுதவிகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. சிறுபான்மையினருக்கு டாம்கோ திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சிறுபான்மையினர்கள் கடன் பெற விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தல் தொடர்பான பயிற்சி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அதிகளவிலான கடன் வழங்கும் விண்ணப்பங்கள் பெறும் முகாம்கள் நடத்தப்பட்டு, அதிகளவிலான விண்ணப்பங்கள்

பெறப்படும். மேலும், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பேசினார்.

இக்கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.குருமூர்த்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சத்தியநாராயணன் மற்றும் துறை அலுவலர்கள், சிறுபான்மையினர் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.